***பிரஸார் பாரதி***
***அகில இந்திய வானொலி, சென்னை-4***
***19 09 2025 FRIDAY 12 40 PM***
***வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்***

***தலைப்புச் செய்திகள்***

***1)*** ***வேளாண் சாகுபடி செலவுகளை குறைத்து, விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதே அரசின் நோக்கம் என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.***

***2)*** ***ட்ரோன்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு, அவற்றின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.***

***3)*** ***Soul திரைப்பட விழாவை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குவஹாத்தியில் இன்று தொடங்கி வைத்தார்.***

***4)*** ***ஆப்கானிஸ்தானின் Bagram விமானப்படை தளத்தை மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்வது குறித்து பரிசீலித்து வருவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.***

***5)*** ***16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியா இன்று ஈரானை எதிர்கொள்கிறது.***

***>>>>>>><<<<<<***

***வேளாண் சாகுபடி செலவுகளை குறைத்து, உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம், விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பதே அரசின் நோக்கம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.***

***புதுதில்லியில் இன்று விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்ற கூட்டத்தில் பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு நடவடிக்கையை மேற்கொண்டதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.***

***வேளாண் சாதனங்களுக்கான வரிக் குறைப்பு, விவசாயிகளுக்கு நேரடியாக பயனளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.***

*வரும் 22ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ள இந்த வரிக் குறைப்பின் காரணமாக, விவசாயப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் டிராக்டர்களின் விலை, அவற்றின் குதிரை திறனுக்கு ஏற்ப, 23 ஆயிரம் ரூபாய் முதல் 63 ஆயிரம் ரூபாய் வரை குறையக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*இதேபோன்று, கதிர் அடிக்கும் இயந்திரம், விதை மற்றும் பூச்சிமருந்து தெளிப்பான் போன்றவற்றின் விலையும் கணிசமாக குறையும் என்று திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<<*

*ட்ரோன்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு, அவற்றின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*இதுவரை ட்ரோன்களுக்கு 28 மற்றும் 18 சதவீத வரி விதிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ஒரே சீராக 5 சதவீதமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.*

*இதன்மூலம் உற்பத்திக்கான இந்தியா மற்றும் சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ், உள்நாட்டிலேயே ட்ரோன்கள் உற்பத்தி செய்வது அதிகரிக்கும் என்று அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பாதுகாப்பு, வேளாண்மை, பேரிடர் மேலாண்மை, கட்டமைப்பு வளர்ச்சி, தகவல் ஒலிபரப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ட்ரோன்களின் பயன்பாடு, மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*நாட்டின் எதிர்காலம் சிறப்பானதாக அமைய குழந்தைகள் மகிழ்ச்சியுடன் இருப்பது அவசியம் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.*

*ராஜஸ்தான் மாநிலம், Kota நகரில் அமைக்கப்பட்டுள்ள "நமோ பொம்மைகள் வங்கியை" தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்த மையம் பொம்மைகள் சேகரிக்கும் இடமாக மட்டுமல்லாமல், சேவை கலாச்சாரம், இரக்கம் மற்றும் ஒத்துழைப்பின் அடையாளமாக திகழ்வதாக கூறினார்.*

*இது, குழந்தை பருவத்திலேயே சமூக உணர்வை ஊக்குவிப்பதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*இந்த வங்கிக்கு பள்ளி குழந்தைகள் அன்பளிப்பாக வழங்கிய பொம்மைகள், சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் விளையாடி மகிழ உதவிடும் என்றும் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.*

>>>>>>><<<<<<<

*இந்தியாவின் தொழில்நுட்ப வளர்ச்சி, சிறுவியாபாரிகள் முதல் பெருநிறுவனங்களின் நிர்வாகிகள் வரை அனைத்து தரப்பினருக்கும் அதிகாரம் அளிப்பதாக உள்ளது என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக நாளிதழ் ஒன்றில் தாம் எழுதிய கட்டுரையை, சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு இந்த தொழில்நுட்பங்களை நாட்டின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*Co-Win போன்ற இந்தியாவின் முன்முயற்சிகள் மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், ஆட்சி நிர்வாகத்தையும் மேம்படுத்தி, உலக அரங்கில் இந்தியாவின் பங்களிப்பை வலுப்படுத்தியிருப்பதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

>>>>>>><<<<<<<

*Soul* திரைப்பட விழாவை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குவஹாத்தியில் இன்று தொடங்கி வைத்தார்.

ஒற்றுமை, கலாச்சாரம் உள்ளிட்ட அம்சங்களை எடுத்துரைக்கும் விதமாக இந்த மூன்று நாள் திரைப்பட விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்களுக்கும், அவர்கள் வசிக்கும் பகுதிக்கும் இடையேயான உறவை போற்றும் வகையிலும், வடகிழக்கு மாநிலங்களின் பாரம்பரிய சடங்குகள் உள்ளிட்ட அம்சங்களை பிரதிபலிக்கும் விதமாகவும் இந்த திரைப்பட விழா நடத்தப்படுகிறது.

>>>>>>><<<<<<<

பாதுகாப்பு அம்சங்களில் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடாக இந்தியா திகழ்கிறது என்று அந்நாட்டு நாடாளுமன்ற தேர்வுக் குழுவின் தலைவர் திரு. *John Moolenaar* கூறியுள்ளார்.

வாஷிங்டனில் அமெரிக்காவுக்கான இந்திய தூதர் திரு. வினய் க்வாத்ரா-வை சந்தித்த பின் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, பிராந்திய பாதுகாப்பு, உற்பத்தி, வர்த்தகம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

மேலும், குறிப்பிட்ட பொருட்களின் உற்பத்தியை சீனாவிலிருந்து இந்தியாவுக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக திகழும் இந்தியா, உலக அளவில் நிலைத்தன்மையை ஏற்படுத்தும் அமெரிக்காவின் நடவடிக்கைகளில் முக்கிய பங்குதாரராக உள்ளதாகவும் திரு. *John Moolenaar* தெரிவித்துள்ளார்

>>>>>>><<<<<<<

*தேசிய விருதுபெற்ற Chalo Jeete Hain குறும்படம் நாடுமுழுவதும் திரையிடப்பட்டு வருகிறது.*

*மத்தியப்பிரதேசத்தில் அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், அமைச்சர்களுடன் இந்த குறும்படத்தை பார்வையிட்டார்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் மாணவர் பருவ வாழ்க்கையை இந்த குறும்படம் எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும், இது நமக்கு உத்வேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்றும் தெரிவித்தார்.*

*மத்தியப்பிரதேசத்தில் வரும் 24ஆம் தேதிவரை இந்த குறும்படம் திரையிடப்படும் என்றும் திரு. மோகன் யாதவ் கூறினார்.*

*புதுச்சேரியிலும் Chalo Jeete Hain குறும்படம் திரையிடப்பட்டது.*

*இதனை ஏராளமானோர் பார்த்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>>><<<<<<<*

*மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.*

*வாகனங்களுக்கான வரி குறைக்கப்பட்டிருப்பது, அதன் உற்பத்தியாளர்களுக்கு மிகுந்த பயனளிக்கும் என்று தமிழகத்தின் திருவள்ளூரைச் சேர்ந்த வாகன உதிரி பாக உற்பத்தியாளர் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – ஜெய்சங்கர் 48 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*ஆப்கானிஸ்தானில் உள்ள Bagram விமானப்படை தளத்தை மீண்டும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்வது குறித்து பரிசீலித்து வருவதாக அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.*

*இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer-ஐ சந்தித்த பின், Chequers நகரில் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசிய அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், இந்த விமானப்படைத் தளத்திற்கு அருகே, சீனாவின் அணுஆயுத தயாரிப்பு மையம் செயல்படுவதால், அமெரிக்கா இதுகுறித்து ஆராய்ந்து வருவதாக கூறினார்.*

*அமெரிக்கப் படைகள், ஆப்கானிஸ்தானிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டு, நான்காண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அதிபர் திரு. ட்ரம்ப் இதனை தெரிவித்துள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*ரஷ்யாவின் Kamchatka பகுதியில் இன்று காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.*

*ரிக்டர் அளவில் இது 7 புள்ளி எட்டாக பதிவானது.*

*இதன் காரணமாக, சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.*

*இதையடுத்து, மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.*

*>>>>>>><<<<<<<*

*16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியா இன்று ஈரானை எதிர்கொள்கிறது.*

*மலேசியாவில் இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.*

*>>>>>>><<<<<<<*

*ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஓமனை எதிர்கொள்கிறது.*

*அபுதாபியில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>>>><<<<<<<*

*சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அர்ஜுன் கதே - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-2, 6-4 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Learner Tien – சீனாவின் Yibing Wu இணையை வென்றது.*

*>>>>>>><<<<<<<*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சாய் கார்த்திக் – ஜப்பானின் Ryuki Matsuda இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*குருகிராம் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Zeal Desai, Shruti Ahlawat ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>>>><<<<<<<*

*ப்ரோ கபடி லீக் போட்டியின் இன்றைய ஆட்டங்களில் புனே - ஹரியானா அணியையும், தமிழகம் - தெலுகு அணியையும் எதிர்கொள்கின்றன.*

*>>>>>>><<<<<<<*